1974 மார்ச் 22]

ஒப்படைக்கப்பட்டது. இரயில்வே பாதையின் குறுக்கே குழாய் பதிக்கப்பட வேண்டிய பணி முடிந்தவுடன் வழங்கப்படும் என்று கருதுகிறேன். ஏனென்றால் அதற்குக் கிடைக்க வேண்டிய அனுமதி கிடைத்திருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை.

தேயிலைத் தோட்டத்தில் பணிபுரியும் இலங்கை அகதிகள்.

* **560 வினா—திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் இலங்கை அகதிகளுக்கு ஏற்படுத்தப் பட்டுள்ள தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர் களின் நலனைக் கவனிக்க மாவட்ட மட்டத்தில் குழு அமைக்கப் பட்டுள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து. இல்லை

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சேரன்பாடி என்ற பகுதியில் உள்ள இலங்கை அகதிகள் அல்ல லுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு குடும்பத்தில் பல பேர் இருந்தாலும், ஒருவருக்குத்தான் அங்கே வேலை தருகிறார்கள். அதனால் பெரிய குடும்பமாக இருப்பவர்கள் மிகவும் சிரமப்படுகி றார்கள் எனவே, இதை அரசு கவனித்து வேலை செய்யக்கூடிய அனைவருக்கும் அங்கே வேலை வாங்கித் தர ஏற்பாடு செய்யுமா? அதே நேரத்தில் அங்குள்ள அதிகாரிகள், குறிப்பாகக் காட்டி லாக்கா அதிகாரிகள் தமிழர்களாக இருக்கும் அளவிற்கு அரசு பார்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, ஏறத்தாழ 276 குடும்பங்கள் அங்கே குடியமர்த்தப்பட்டிருக்கி றார்கள். அது மட்டுமல்ல, 68 அகதிகள் பணியாளர்களாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தைச் சரியான முறையில் கவனித்துக்கொள்ளவும், அவர்களது நலன் களைப் பராமரித்துக் கொள்ளவும் ஒரு குழு ஏற்கனவே அரசாங் கத்தால் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு அவர்களது நலன்களையும் கவனித்து, அந்தத் திட்டத்தையும் முறையாகச் செயல்படுத்திச் செய்து வருகிறது. ஏதாவது குறையிருந்தால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இ. ராமசாமி : தலைவரவர்களே, சிலோன், பர்மா தமிழர் களுக்கு வால்பாறையில் 1,000 ஏக்கர்களில் தேயிலை அல்லது காப்பித் தோட்டம் அமைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தனிக் கேள்வி போடவும்.

உவரியில் மீன் பதனிடும் தொழிற்சாலை

*561 **வினு—திரு. வீ. கார்த்தீசன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) நெல்லை மாவட்டம், உவரியில் கிடைக்கும் மீன்களைப் பயன்படுத்தும் வகையில் அங்கு ஒரு மீன் பதனிடும் சாலை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது நிறுவப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இல்லை.

போந்தவாக்கம்-மாதர்பாக்கம் சாலை.

*562 **வினு—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், போந்தவாக்கம் முதல் மாதர்பாக்கம் வரையுள்ள பேருந்துகள் செல்லும் சாலையைப் பெரு வழித் துறையில் எடுத்து தார்ச்சாலை போடும் திட்டம் நிறை வேற்றப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இச் சாலையைப் பெரு வழித் துறைக்கு மாற்ற 1973-74 ஆம் ஆண்டுதான் மாவட்ட வளர்ச்சி மன்றம் குறைந்த முதன்மையுடன் பரிந்துரை செய்தது. அதனுல் இதுவரை இச் சாலையை பெருவழித் துறைக்கு மாற்ற முடியவில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, ஆந்திர எல்லையில் இருக்கும் இந்த ஊராட்சி ஒன்றியச் சாலையில் நீண்டநாட்களாகப்